Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 152/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS-1

| | | | |
|---|---|---|---|
| Name: | ருக்குமணி | Calling: | கூலி |
| Father's/Husband's Name: | கோவிந்தராஜ் | Religion: | |
| Village: | கொத்தகோட்டை | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.07.2026 நேரம் : 12.50 PM

(2 எதிரி ஆஜர், 1ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது.)

அ.சா.1 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இதற்கு முன் முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்களை போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். என் மகனுக்கு மனநலம் சரியில்லை என்றால் சரிதான். அவர் தவறி விழுந்து தான் அவருக்கு நெற்றியிலும் மார்பிலும் அடிப்பட்டதாக என்னிடம் கூறினார் என்றால் சரிதான். நான் தான் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். சம்பவதேதியில் சம்பவ நேரத்தில் நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும் வேலைக்கு சென்றிருந்தேன் என்றாலும் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றாலும் தவறி விழுந்ததாக தான் போலிசாரிடம் வாய்மொழியாக

கூறினேன் என்றாலும், அவர்கள் எழுதப்படாத தாளில் கைரேகை வாங்கிக்கொண்டார்கள் என்றாலும் சரிதான். அதில் என்ன பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதன மனுவில் உள்ள கைரேகை என்னுடையது என்றால் சரிதான். **அந்த சமாதன மனு எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதை நான் எதிரியிடம் சமாதானமாக செல்வதற்காக போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ருக்குமணி

SRIPATHI K

SRIPATHI K
2026.07.29
10:23:03
+0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 152/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS-5

| | | | |
|---|---|---|---|
| Name: | சங்கர் | Calling: | விவசாயம் |
| Father's/Husband's Name: | கண்ணன் | Religion: | |
| Village: | கொத்தகோட்டை | Age: | 48 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.07.2026 நேரம் : 12.57 PM

(2 எதிரி ஆஜர், 1ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது.)

அ.சா.5 முதன்மை விசாரணை

எதிரிகளை தெரியும். அ.சா.1ஐ தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு போலிசார் ராகுலும், ஈஸ்வரனும் அடிப்பட்டுக்கொண்டதற்கு சாட்சியாக என்னிடம் வீட்டின் அருகே வாங்கினார். **பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் முறையே அ.த.சா.ஆ 4 மற்றும் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் கையொப்பங்களை நான் என்னிடம் வைத்து மாலை 05.00 மணிக்கு போட்டேன் என்றால் சரிதான். நான் போட்ட இரண்டு கையொப்பங்களையும் நிரப்பப்படாத இரண்டு வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான். போலிசார் என்னிடம் பெயர், முகவரி மட்டும் கேட்டுத்தெரிந்துக்கொண்டார்கள் என்றாலும் வழக்கு விவரம் குறித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சங்கர்

SRIPATHI K

SRIPATHI K
2026.07.29
10:23:20
+0530

Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC . No. 152/2025

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS-6

| | | | |
|---|---|---|---|
| Name: | புஷ்பராஜ் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's/Husband's Name: | அய்யாசாமி | Religion: | |
| Village: | பொன்னேரி | Age: | 60 |
| Taluk: | ஜோலார்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.07.2026 நேரம் : 02.26 PM

(2 எதிரி ஆஜர், 1ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது.)

அ.சா.6 முதன்மை விசாரணை

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. செந்தில் குமார் என்பருக்காக சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது அம்பலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.10.2020 ம் தேதி வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஈஸ்வர் என்பவரை பார்க்க அவர் மனநிலை சரியில்லாத நபர் என தெரியவந்ததால் அவருடன் இருந்த அவரது

தாயார் ருக்குமணி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. அந்த வாக்குமூலத்திற்கு மனு ரசீது எண் 942/2020 என வழங்கி பரிசீலனைக்கு பின்னர் 14.10.2020 ம் தேதி 12.00 மணிக்கு அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 1126/2020 சட்டப்பிரிவுகள் 294(பி),324,506(2) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று அதே நாள் 13.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நடராஜன், சங்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 7 மற்றும் அதசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அதே நாள் கோடியூர் வாதி வீட்டின் எதிரே சம்பவயிடத்தில் எதிரிகள் பயன்படுத்தி சென்ற வழக்கு சொத்தான சுமார் 90 செ.மீ நீளம் கொண்ட விறகு கட்டை ஒன்றை மகசரில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். **படிவம் 91 அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்து விறகு கட்டை வழக்கு நிமிர்த்தம் நான் கைப்பற்றியதாகும். **அந்த விறகு கட்டை சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் ருக்மணி, பூவரசன், திருப்பதி, மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவம் நிகழ்ந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகளை கொத்தகோட்டை கூட்ரோட்டிடம் 14.10.2020 15.00 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான ஈஸ்வர் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.

செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ் பெற்னேன். **ஈஸ்வரனின் ஆகியோரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று முறையே அ.த.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(பி),506(2), 324 IPC இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் சம்பவயிடம் செல்லாமலும், சாட்சிகளை சரிவர விசாரிக்காமலும், வழக்கு ஆவணங்களை வைத்து எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்து தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறு. அ.சா.1 மனநலம் பாதிக்கப்பட்ட தன் மகன் நிலைதடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக தான் என்னிடம் வாய் மொழியாக ஒரு புகார் அளித்திருந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) புஷ்பராஜ்

SRIPATHI K

SRIPATHI K
2026.07.29
10:23:25
+0530